19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.

தேதி 12.11.2025

| | | |
|---|---|---|
| பட்டியல் வழக்கு எண் | – | 3424/2018 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா. 1 |
| பெயர் | – | செழியன் |
| தந்தை பெயர் | – | லட்சுமணன் |
| வயது | – | 61 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 12.11.2025 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (2,3,4,5,6,7,8,9,10 எதிரிகள் மனுவின் பெயரில் ஆஜரில்லை. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

1) நான் புகார்தாரர் நிறுவனத்தில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேனா என்றால் சரிதான். எப்போது என்றால் 31.05.2024 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணி ஓய்வு பெற்ற பின்னர் புகார்தாரர் நிறுவனத்தில் இந்த வழக்கினை நடத்த முறையாக யாரேனும் நியமிக்கப்பட்டு மனு எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் இந்த விவரம் எனக்கு தெரியாது. புதசாஆ–16 ஐ நான் Print out எடுக்கவில்லை என்றாலும் மணிகண்டன் என்பவர் தான் Print out எடுத்துள்ளார் என்றால் நான் Print out எடுக்கவில்லை. ஆனால் அந்த ஆவணத்தை புகார்தாரர் நிறுவனம் சார்பாக தாக்கல் செய்துள்ளேன். புதசாஆ–16 விவரங்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியும். வழக்கறிஞர் சொன்னார். அதன் பின்னர் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கும்போது தெரியும். புதசாஆ–16 ஆவணம் பெயர் என்ன என்று தெரியுமா என்றால் அது company information ஆகும்.

2) புதசாஆ–16 ஆவணத்தில் யாருடைய கையொப்பம் அல்லது Digital Signature எதுவும் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் இந்த ஆவணம் download செய்யப்பட்டு எடுக்கப்பட்ட ஆவணமாகும். புதசாஆ–16 ஆவணத்திற்கு முறையாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 பி சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் பிரிவு 63 BSA certificate இணைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குப்படி காசோலை எந்த வருடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 2000 ம் வருடம் கொடுக்கப்பட்டுள்ளது. புதசாஆ–16 ஆவணமானது 2000 ம் வருடத்தில் எதிரி நிறுவனம் என்னவாக இருந்தது என்பதற்கான ஆவணம் இல்லை என்றால் தற்காலத்தில் அந்த நிறுவனம் என்னவாக உள்ளது என்பதற்கான ஆவணம் அது. புகார் தாக்கல் செய்யும்போதும் தற்போதும் எதிரி நிறுவனம் Private Limited company ஆக தான் இருந்து வருகிறது. காசோலை கொடுக்கப்பட்ட காலகட்டத்தில் எதிரி நிறுவனம் என்னவாக இருந்தது என்பதற்கு ஆவணங்கள் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3) தற்போது என்னிடம் காட்டப்படும் எதசாஆ–2 முதல் 5 வரையிலான ஆவணங்களில் எதிரி நிறுவனத்தின் பெயர் என்னவாக உள்ளது என்றால் Limited company என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 17.03.1999 அன்று TNPL நிறுவனத்தில் இருந்து எதிரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் என்னவென்று எதிரி நிறுவனத்தை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Limited என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. ஆனால்இந்த ஆவணம் புகார்தாரர் நிறுவன Letter Head ல் அனுப்பப்பட்டுள்ளது. நகல் ஆவணமாக உள்ளது. புதசாஆ–16 ஆவணம் எதிரி நிறுவனத்தின் தன்மையை நிரூபிக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காலகட்டத்தில் Manito Electronics Private Limted company என்ற நிறுவனமே இல்லை என்றால் சரியல்ல. இல்லாத நிறுவனத்தின் மீது அந்த நிறுவனம் Private Limited ஆக இருந்தபோது இருந்த

காசோலையை வைத்து இந்த வழக்கினை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி நிறுவனம் Public Limited ஆக மாறியது தெரிந்து தான் 1999ம் வருடமே Public Limited என்று போட்டு கடிதம் அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. இல்லாத நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**8 முதல் 10 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்கள் 2,3 எதிரிகளின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை அவர்கள் தரப்பிலும் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**<u>5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் ஏற்கனவே முதல் விசாரணை சாட்சியம் அளித்தபோது புகார்தாரர் நிறுவனத்தில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேனா என்றால் இல்லை. நான் பணி ஓய்வு பெற்றபின்னரும் இந்த வழக்கினை தொடர்ந்து நடத்தி வருவதற்கான interest என்னவென்றால் எனக்கு எந்த வித personal interest ம் கிடையாது. ஆவணங்களை குறியீடு செய்ய அழைக்கப்பட்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னை அழைத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வந்து சாட்சியம் அளிக்கிறேன். என்னை எங்கள் நிறுவனத்தில் authorize செய்து சாட்சியம் அளிக்க ஆவணம் எதுவும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு எந்த ஆவணமும் நிறுவனத்தில் இருந்து அளிக்கப்படவில்லை. ஆனால் நிறுவனத்தில் இருந்து Internal ஆக Approval வாங்கியிருப்பதாக சொல்லி சாட்சியம் அளிக்க அனுமதித்தால் சாட்சியம் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளேன். என் தரப்பில் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) மணிகண்டன் என்பவர் எங்கள் நிறுவனத்தில் பணி புரிகிறாரா என்றால் சரிதான். Chief Manager (Legal)ஆக பணி புரிகிறார். அவர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவர் பதிவிறக்கம் செய்தபோது நான் உடன் இல்லை என்றால் சரிதான். புதசாஆ–16ல்

பதிவிறக்கம் செய்ததற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதி, நேரம், இணையத்தில் அனைத்தும் உள்ளது. என்ன தேதி, நேரம் என்றால் 28.06.2024, 03.01 PM என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புதசாஆ–16 ல் யார் யார் இயக்குநர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Moosa Perambally and Basheer Mohammed Koyappakovilakath என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் 2024 ம் வருடத்தின் இயக்குநர்கள் ஆவார்.

3) புதசாஆ–16 ல் புகார்தாரர் நிறுவனத்தில் charge குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் Charge upload செய்யப்பட்டிருந்தால் தான் வரும். காசோலை கொடுத்தது commercial transaction என்பதால் அதை பற்றி குறிப்பிட்டிருக்காது. Charge என்பது யார் போடுவார் என்றால் யார் கடன் வாங்கினார்களோ அவர்கள் தான் அதனை பதிவேற்றம் செய்வார்கள். புதசாஆ–16 ஆவணத்தை எங்கள் வழக்கில் உள்ள குறைபாடுகளை மறைக்கவேண்டி தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் நிறுவனத்தில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டதால் வழக்கில் சாட்சியம் அளிக்க எந்த ஒரு அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**4, 6,7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

Sd/– Tmt. P. Magalakshmi

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.